1978 மார்ச் 2]

(ஆ) கூத்தாநல்லூர் பேரூராட்சி ரூ, 85,000 மதிப்பீட்டுத் தொகையில் காய்கறி மார்க்கெட் கட்டடம் கட்டுவதற்கு 30—6—77 நாளைய தீர்மானத்தில் நிர்வாக அனுமதி அளித்துள்ளது. மேற்படி மதிப்பீடு திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலை மற்றும் கிராம வேலைப் பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி கோரி அனுப்பப் பட்டுள்ளது என்றும் அவர் அனுமதி வழங்கியவுடன் வேலை துவக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள், இங்கு சைக்கிள் மூலமாக வீடுகளில் கறிகாய் கொண்டு போய் கொடுக்கும் ஒரு திட்டத்தை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கூத்தாநல்லூரில் உள்ள கட்டடத்தைப் பற்றிய கேள்வி. நீங்கள் கேட்பதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

மன்னார்குடியில் பொதுக்குழாய்கள்.

*351 வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி நகரில் தெருக்களுக்கு பொதுக்குழாய்கள் இணைப்பதில் சிக்கல் உள்ளதா ?

(ஆ) ஆயுள் காப்பீட்டு கழகம் தெருக்களுக்கு இணைப்புக் கொடுக்கும் திட்டத்திற்கு மறுப்பு தெரிவித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மன்னார்குடி குடிநீர் திட்டத்திற்காக அரசிடமும், ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமும் மன்னார்குடி நகராட்சி வாங்கியுள்ள கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஏற்ப, நிதிநிலையை சீரமைக்கக் கருதி, கடந்த இரண்டாண்டுகளாக நகராட்சி எல்லைக்குள் தெருக் குழாய்கள் அமைப்பது குறைக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக வீட்டுக் குழாய் இணைப்புகள் அதிகமாகத் தரப்பட்டுள்ளன.

(ஆ) இல்லை.

சிதம்பரத்திற்கு குடிநீர் வழங்கல்.

* 352 வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் நகராட்சிக்கு கொள்ளிடத்திலிருந்து குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சிதம்பரம் நகராட்சிப் பகுதிக்கு அருகாமையிலுள்ள சுமார் 4 மைல் தூரத்தில் இருக்கும் கொள்ளிடம் ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டு வர வேண்டும் என்று அந்தப் பகுதியிலுள்ள மக்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். ஆகவே இனிமேலாவது அதுபற்றி பரிசீலனை செய்து இந்தத் திட்டத்தை உருவாக்கிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்திற்கு குடிதண்ணீர் கொண்டுவருவதற்கு வடக்கு ராஜன் கால்வாயிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு ஒரு திட்டமிருக்கிறது. ஜனத்தொகையைப் பொறுத்த வரையில் 1991-ல் 68 ஆயிரமாக இருக்கும், 2006-ல் 87 ஆயிரமாக இருக்கும். இங்கு அதிக நீர் வழங்குவதற்காக 64,00,000 ரூபாய் செலவில் ஒரு திட்டமும், அதை பராமரிப்பதற்காக 2 லட்சத்து 40 ஆயிரம் செலவில் ஒரு திட்டமும் வகுக்கப் பட்டிருக்கிறது. நகராட்சிக்கு இதற்குப் போதுமான நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால், வேறொரு மாற்றுத் திட்டம் ரூபாய் 20 லட்சத்திலும், மற்றும் பராமரிப்புக்காக 53 ஆயிரம் செலவில் ஒரு திட்டமும், சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது, இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இதற்கு நிதி ஆதாரம் கிடைக்குமானல் அரசு அனுமதி அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9.30]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கொள்ளிடத்திலிருந்து தான் இந்த வடக்கு ராஜன் கால்வாய் பிரிகின்ற நிலை இருக்கின்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டினர்கள். எனவே, இந்த வடக்கு ராஜன் கால்வாயிலிருந்து இப்போது போடப்பட்டுள்ள திட்டத்தின்கீழ் அங்கே சிதம்பரம் நகராட்சியிலே போதுமான நிதி ஆதாரம் இல்லாவிட்டாலும், அரசாங்கமே முன்வந்து பக்கத்திலே அண்ணுமலைப் பல்கலைக்கழகம் போன்ற பெரிய நிறுவனம் இருப்பதைக் கருதி, அங்கே குடிநீர் வசதி செய்து கொடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிய திட்டத்திற்கு நிதி வசதியில்லாத காரணத்தினால், இருக்கின்ற திட்டத்தையே அபிவிருத்தி செய்வது தான் இப்போது நான் சொன்ன திட்டம். அரசாங்கமே ஏற்று நடத்துவது என்பது, நாங்கள் தேர்தலிலே முன்னே அளித்துள்ள வாக்குறுதிக்கேற்ப, கிராமங்களுக்கு குடிதண்ணீர் அளிப்பது என்ற முறையிலே டைப் 1, டைப் 2 என்று போட்டிருக்கிறோம். டைப் 1 என்பது, ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் குடிதண்ணீர் இல்லாத கிராமங்கள்; டைப் 2 என்பது, ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் தண்ணீர் இருக்கும், பட் நாட் பாட்டபுள். அதாவது குடிக்கக்கூடிய தண்ணீராக இருக்காது. உப்புத் தண்ணீராக இருக்கும். இந்தக் கிராமங்களுக்கு மட்டும் உடனடியாக அரசுச் செலவிலே குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பது என்பது இந்த அரசாங்கத்தினுடைய இப்போதைய திட்டம்.

பொற்கொல்லர்கள் பிள்ளைகளுக்கு பயிற்சி வகுப்புகள்.

*353 வி—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சர்வீஸ் கமிஷன் ''குரூப் 4'' தேர்வில் கலந்துகொள்ளும் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புகளில் பொற்கொல்லர்களின் குழந்தைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென பொற்கொல்லர் சங்கம் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளதா ?

(ஆ) ஆமெனில், அரசு எடுத்துக்கொண்ட முடிவு யாது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) ஆம்.

(ஆ) பொதுப்பணியாளர் தேர்வாணைக்குழுவின் 'குரூப் 4' தேர்வில் கலந்துகொள்ளும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கென நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைத் தவிர ஏனையோர் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை என்ற காரணத்தாலும், பொற்கொல்லர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ளதாலும் இக் கோரிக்கை ஏற்கப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கப்படவில்லை என்பதற்கான காரணத்தை விளக்கியிருக்கிறார்கள். இந்த சர்வீஸ் கமிஷன் குரூப் 4 தேர்வில் தாழ்த்தப்பட்ட மக்களைத் தவிர, ஏனைய பொற்கொல்லர்களைத் தவிர, மற்ற மற்ற பிற்படுத்தப்பட்ட பிரிவுகளிலே உள்ளவர்களுக்கும் அத்தகைய வாய்ப்புக்களைப் பெற அரசு ஏதேனும் சர்வி அளித்து வருகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன் ?